# ஈழம்



பறிக்கப்பட்ட மலர்களெல்லாம் உலர்ந்து போகாது. நாளை வரும் வசந்தத்தின் உரங்களாய் மாறும். அப்போது ஆயிர மாய் செவ்விரத்தம் பூக்கும். பணி அனைத்தும் முடிந்த பின்தான் அமைதி காணுவோம். படைக் கருவிகளை அப் போதுதான் கீழே போடுவோம்.

நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம் நாடு ஈழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ! ஜெருசலேம்!

(பாலஸ்தீனியப் பாடல்)

உடைந்த உள்ளம் உதிரம் பெருக்கி வெளியில் வந்த நாள்முதலாய்
எனது நாட்டை ஆண்டுபலவாய்க் கணவேயில்லை!
எமது கண்ணீர் எனது நாட்டை நனைக்கவேயில்லை!
மனைவி மக்கள் கொல்லப்பட்ட நாள்வரையிலே
மன அமைதியோடு வாழ்ந்தேனே உழவுத்தொழிலிலே!

ஜெருசலேமே வாழ்க நீ! பாலஸ்தீனம் வாழ்கவே!
பணியனைத்தும் முடிந்தபின்தான் அமைதி காணுவோம்!
படைக்கருவியை அப்போதுதான் கீழேபோடுவோம்!
ஜெருசலேமே வாழ்க நீ! பாலஸ்தீனம் வாழ்கவே!

என்றேனும் ஓர்நாளில் எனது நாட்டிலே
எக்களித்து மகிழ்ச்சியோடு நானும் ஆடுவேன்!
சொந்த நாட்டின் வளம்பெருக்க சோர்வில்லாமலே
சுதந்திரமாய்க் குடிமகனாய்ப் பாடுபடுவேன்!

இன்றைக்கு நான் ஆயுதங்கள் ஏந்தியிருக்கிறேன்!
எனது நாட்டை மீட்பதற்காய்ப் போரிடுகிறேன்!
உடமைக்காக உரிமைக்காகப் போர்புரிகிறேன்!
முடிந்த பின்னர் எனதுநாடு திரும்பப்போகிறேன்!

(தொடர்ச்சி 3ம் பக்க அட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம்

மலர் 1 — இதழ் 3 15—12—83 — அன்பளிப்பு ரூபா 2


# எதிரொலி

ஈழத்திற்கான எதிர்கால தீர்வு குறித்தும், ஜனநாயக தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகள் குறித்தும், நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் உள்ளோம்.

1976,வட்டுக் கோட்டை தீர்மானத்தின் மூலம், ''விஞ்ஞான சோசலிச தமிழீழம்'' என பிரகடனம் செய்தவர்கள். 1978-ம் ஆண்டுக்குமேல் பிரகடனத்தை மெல்ல மறக்கத் தொடங்கினர் மாவட்ட அபிவிருத்திச் சபையை தூக்கிப் பிடித்தார்கள், ஆறு மாதங்களுக்குள்ளாகவே அதன் வெற்றுத்தன்மை அம்பலத்திற்கு வந்தது. இவர்களோ மக்களை விட்டு-வெகுதூரம் விலகிச் செல்லத் தொடங்கினர். மக்களின் எண்ணங்களுக்கு மாறாக இவர்கள் செயல்படத் தொடங்கினர்.

1983ம் ஆண்டு மீண்டும் மோசமான வகையில் ஈழவர்களை இரத்தத்தில் நனைத்தது உலகம்தன் கவனத்தை ஈழவர்பால் திருப்பியது-இச்சாதக சூழ்நிலையைக் கூடகூட்டணித் தலைமைஈழத்தின் நிரந்தர தீர்வுக்கு பயன்படுத்ததவறியது. எப்படி பயன்படுத்துவது என்பதன் வழிமுறைகூட தெரியாமல் தடுமாறியது. ஆனால் பேச்சுவார்த்தையில் சரணடைவதில் மட்டும் வெற்றிகரமாக நடந்துகொண்டார்கள்.

அரசியல், விடுதலைப் போராட்டத்தில் பேச்சுவார்த்தை என்பது அவசியம் என்பதனை நாம் ஏற்கிறோம். ஆனால் பேச்சுவார்த்தையை எப்படி அமைத்து கொள்வது.கருத்துக்களை எப்படி முன்வைப்பது நம் அடிப்படைகள் மாறாமல் தீர்வுகளை எப்படி அமைத்துக்கொள்வது என்பதில், தூர நோக்கும், இலட்சிய தெளிவும், பரந்தமனப்பான்மையும் அவசியம் ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் எப்படி அமைந்தன?

தமிழர் விடுதலைக் கூட்டணியை விடவும் வேறு பல இயக்கங்கள் உண்டு. ஈழத்திற்கான பொறுப்பில், இவர்களை விடவும், மற்றைய இயக்கங்கள் எந்தளவிலும் குறைந்தவை இல்லை. அதே வேளையில் மக்களின் நம்பிக்கைக்கும், போராட்ட முன்னெடுப்புக்கான முனைப்புக்கும் தமிழர் விடு


அட்டை ஓவியம்
நேரு



தொடர்புக்கு
க. பாலன்
10, சிவன்கோயில் தெரு,
கங்ராம்தோட்டம்
சென்னை-24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக் கூட்டணியையும் விடவும். இவ்வியக்கங்கள் முழு அளவில் பங்கேற்றவை ஆனால் ஒரு தீர்வு குறித்து ஏற்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது இவ்வியக்கங்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திட்டமிட்டே இவ்வியக்கங்களை புறக்கணித்தனர் என்றே நாம் கருதுகின்றோம்.

ஆனால் இவ்வியக்கங்களின் எண்ணங்களும் ஈழவர்களின் எண்ணங்களும் பிரதிபலிக்காத எந்த தீர்வும் நிரந்தர தீர்வாக, சரியான தீர்வாக அமையாது என்றே கருதுகின்றோம்.

❋ ❋ ❋

''ஈழம்'' இதழ் கண்டு எமக்கு பலர் மடல் வரைந்துள்ளீர்கள். அதில் முதல் இதழ் பற்றியும், அதனை அனுப்பும்படியும் கோரியுள்ளீர்கள், ஈழம் முதல் இதழ் தற்போது தங்களுக்கு அனுப்புமளவிற்கு கைவசம் இல்லை. முதல் 1978 பிப்ரவரியில் வந்தது மீண்டும் தற்போது ஈழத்தை வெளியிட்டபோது 1978 இதழை முதல் இதழாக கொண்டோம். அதன் முகப்புபடம் கீழே வெளியாகியுள்ளது.

# "இந்துமா கடலில் அணு ஆயுத அச்சுறுத்தல்"

இந்து சமுத்திரப்பிராந்தினுள் அமெரிக்காவின் கடற்படை நிர்மாணிப்பின் பங்காக அணு ஆயுதவிஸ்தரிப்பு அமைந்துள்ளது. இது ஆயுதப் போட்டி புறக்கணிப்புப் பிரதேசமான இந்து சமுத்திரத்தை மிகவும் பாதிப்பதாக அமைந்துள்ளது.

வாஷிங்டன் பத்திரிகையாளர் ஒருவரின் ''மத்திய கிழக்கில் ஆய்வுகளும், தகவல்களும்'' என்ற அறிக்கையின் படி மூன்று அமெரிக்க விமானத்தாங்கி கடற்படை கப்பல் பிரிவுகள் தற்போது. அராபியக்கடல், பேர்சியன் குடா பகுதி, ஆகிய பிராந்தியங்களில் நிலை கொண்டுள்ளன. இவற்றில் பல நூற்றுக்கான அதி நவீன அணு ஆயுத தொகுதிகளைக் கொண்டுள்ளன.

100 இலிருந்து 500 கிலோ தொன் (Kilotons) தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய B-61 வகை அணுக்குண்டு, 20 கிலோ தொன் தாக்கத்தை உற்பத்தி செய்யக்கூடிய இலேசான நிறையை உடைய அணுக்குண்டுகள், B-43 வகை நடுத்தர நிறை அணுக்குண்டுகள், W-44 வகை ஒரு கிலோ தொன் தாக்கத்தை உற்பத்தியுடைய கப்பலில் நிறுவப்பட்ட நீர் மூழ்கி எதிர்ப்பு ஏவுகணைகள், W-45 வகை பல கிலோ தொன் தாக்கத்தை உற்பத்தியுடைய கப்பல்களில் நிறுவப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவுகணைகள், W-41 ஒரு கிலோ தொன் தாக்கத்தை உற்பத்தியுடைய மேற்பரப்பில் இருந்து வான்வெளியில் தாக்கக்கூடிய விமான எதிர்ப்பு ஏவுகணைகள் என்பன இவற்றுள் அடங்கும் மிகச் சிறந்த சூட்சுமடைந்த அணு ஆயுதத் தொகுதிகளாகும்.

மேலும் டியாகோ காசியா, ஓமானின் மசினா தீவு என்பவற்றில் இருந்து இயங்கி வரும் P-3 மகை நீர்மூழ்கி எதிர்ப்பு வேவு விமானங்கள் B-54 நிறை குறைந்த அணு வெடிகளை தாங்கிச் செல்வதாகவும், புதிய மத்திய

8-ம் பக்கம் பார்க்க


ஈழம்

வெளியீடு—1 பிப்ரவரி 1978

ஈழவா இலக்கும் அவர்தம் இயக்கமும்

நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நமது நாடு ஈழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள்-திரிபுகளுக்கு பதில்

உரிமை வேறு; உடைமை வேறு;

உரிமைகள் அரசியல் சாசனத்தின் மூலம் பெறக்கூடியது ஆனால் உடமையோ மக்கள் போராட்டத்தின் மூலம்தான் பெற முடியும். உரிமைகள் ஒரு சாராரின், ஒரு வர்க்கத்தினரின் சலுகைகளாவும் கூடும். அது போய் உடைமையும் மக்களடிப்படையிலான பொதுவுடமைக்கான போராட்டம் இல்லையேல், தனியார் உடைமையாகவும் கூடும். மக்கள் உடைமை தனியார் உடைமையாகும் போது அவர்தம் தன்னுடைமையாகவும் கூடும்.

இந்த அடிப்படையில் ஆய்பவர்கள்.

எந்த ஒரு சூழ்நிலையையோ, அல்லது பிரச்சினையையோ அணுகும்போது அந்த அணுகுவோரினது வர்க்கம் சார்ந்த நலன் தெளிவாகப் வெளிப்பாடாகும். தொழிலாளர்களைக் கொண்ட பாட்டாளி வர்க்க அணுகுமுறை வேறு: பூர்சுவா ஜனநாயகவாதிகளின் அணுகுமுறைவேறு; கட்சிச் சம்பிரதாயவாதிகளின் அணுகுமுறை வேறு; முதலாளி வர்க்கத்தினரின் அணுகுமுறை வேறு; அவர்களின் ஏவலாளிகள், அடிவருடிகளின் அணுகுமுறை வேறு.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியிட்ட திருவாளர் பி. ஏ. காதரின் ''பெருந் தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம்'' என்ற நூலைப்பரிசிலித்துப் பார்த்துத் திறனாய்வு செய்யும் போது, அவர் சார்ந்த வர்க்கம் ஏவலாளிகளினதும், முதலாளிகளின் அடிவருடிகளினதும் என்பது புலனாகிறது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் என்னவென வினவுகின்ற அவர். மலையக மக்கள் ஒரு ''தனித் தேசிய இனம்'' என முத்திரை குத்த முயலும் போது, முதலாளி வர்க்கத்தினரின் ''தேசிய வாதத்தையே'' முன் வைக்கிறார். எப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு காலத்தில் கிழக்கிலங்கையில் வாழும் இஸ்லாமிய தமிழ் மக்கள் (இவர்களை முஸ்லீம் என்ற மத ரீதியில் இனம் கண்டு) தனித் தேசியமாக வாழ உரிமையுண்டு எனக் கூறியதோ அதே போல் தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஊதுகுழலாக பி. ஏ. காதர் மலையகத் தமிழர் ஒரு தனித் தேசிய இனம் எனக் கற்பிக்க முனைவது. பெருந்தோட்டத் தொழிலாளர் உட்பட பாட்டாளி வர்க்கத்தைக் கொண்ட மலையகத் தமிழ் மக்கள் தனித் தேசியமாக இயங்க முடிவும் உரிமையும் கொண்டால் அதை யாரும் மறுக்க முடியாது ஏனெனில் பட்டாளி வர்க்கமே தேசிய சுய நிர்ணயத்தை நிச்சயிக்க வேண்டும், பட்டாளி வர்க்கத்தின் அரசியல் சித்தாந்தமான மார்க்சிய மேற்கோளின்படி ''தேசிய சுப நிர்ணய பிரச்சினையை ஏனைய பிரச்சினைகள் போல், முக்கியமாகவும், முனைப்பாகவும் நாம் கருத்தில் கொண்டு அதில் அக்கறை கொண்டுள்ளோம். ஏனெனில் முதலும் முக்கியமுமாக அத் தேசியத்தின் பாட்டாளி வர்க்கத்தின் சுய நிர்ணயத்திலேயே'' என்று லெனின் எறுதுகிறார்.

(In the question of self determination of Nations, As in every other question, we are interested first and formost, in the self determination of the proliteriat within a given nation.)

இலங்கைத் தமிழர் தம் பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும்பான பெருந் தோட்டத் தொழிலாளர் தம் உரிமைகள், உடைமைகள் பாதிக்கப்படடபோது பொன்னம்பலங்களும், தொண்டமான்களும், அ ச் சு க ளும்... ஏன்? அப்துல்காதர்களும் தனித் தேசியம் பேசாத போது இன்று பி. ஏ. காதர் தனித் தேசியம் பற்றிப் பேசுகிறார். ''ஆடு நனைகிறது என ஓநாய் அழுதாம்'', போன்றுதான் காதரின் கதை. அதாவது 1949-ல் தோட்டத் தொழிலாளர்களின் பாதிக்கப் பட்டபோது அவர்கள் தம் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் தம்முடைய வர்க்க நலன்களைப் பேணிக் கொள்ளவாவது, ஒரு போராட்டம் நடத்த முன்வரவில்லையே. அப்படி நடத்தப் பட்டிருந்தால் தமிழர் பிரச்சினை மட்டுமல்ல நாடு தழுவிய பிரச்சினையே தீர்க்கப் பட்டிருக்கும். ஆனால் அப்போ திரு சௌ. தொண்டமான், ''றம் பொட'' போன்ற பல தோட்டங்களின் உரிமையாளர். அத்தோட்டங்களின் உடைமைக்குரிய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டபோது பாராமுகமாகவிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு மட்டுமில்லாமல் சிங்கள முதலாளி வர்க்கத்தினருடன் இணைந்த பிரதிபிம்பமாக இருந்தார். இங்கு தோட்டத் தொழிலாளர்களுக்கும். இந்திய வம்சாவளித் தமிழருக்கும் இடையேயுள்ள தாற்பரிய வேறுபாட்டை உணர வேண்டும். மலையகத் தொழிலாளர்கள் வம்சாவளியினர் அல்ல, அவர்கள் இலங்கையில் அப்போது அபிவிருத்தி அடையாத நிலப்பிரபுத்துவத்தின் காரணத்தால் வளப்படுத்தப்படாத அல்லது அபிவிருத்தி பெறாத இருந்த நிலப்பிராந்தியத்தில் பொருளியல் அடிப்படையில் முதலாளித்துவ அமைப்பில் ஒரு தோட்டமயமான ஏற்றுமதிப் பொருளியலை உருவாக்க உதவியவர்கள்.

ஆங்கிலேயர் காலத்தில் அடிமைத் (Slave Trade) தொழிலுக்குப் பின் உருவான கூலி (Serfdom) அடிப்படையில் இலங்கையில் குடியேற்றப்பட்டவர்களே-யொழிய வந்தேறு குடிகளல்லர் குடியேற்றப்பட்ட காலந்தொட்டு இலங்கையை முக்கியமாக மலையகத் தேயிலைத் தோட்டங்களைத் தாயகமாகக் கொண்டவர்கள். இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி தொடர்ந்து தொடர் சந்ததிகளாகவே இருந்து வந்திருக்கின்றனர். இன்றும் உழைக்கும் வார்க்கத்தினராக இலங்கையில் இருந்து வருகின்றனர்.

ஆனால் ஆங்கிலேயரின் ஆட்சியில் முதலாளித்துவமயமான பொருளாதார அமைப்பு இலங்கையில் வளர்ந்து வரும் காலத்தில் உலக ரீதியில் ஆங்கிலேயரால் கைக்கொள்ளப்பட்ட கட்டுப்பாடில்லாத (Laizefare) கொள்கையினால் பல நாடுகளில் இருந்தும் பணம் தேடும் நோக்கமாக இலங்கைக்குப் பலர் வந்து சென்றனர். பாகிஸ்ணிபதலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பலர் வந்தார்கள். இவர்களின் நோக்கம் தோட்டத்தொழிலாளர்களின் நோக்கத்திற்கு எதிர்மாறானது. எப்படியாவது பணம் சேர்த்து இந்தியாவுக்குப் பணம் அனுப்புவதே இவர்கள் நோக்கம்.

இவர்கள் நமது நோக்கத்திற்குச் சாதகமாக தோட்டத் தொழிலாளர்களை உபயோகிக்க முயன்றார்கள் என்பது பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. இல்லாவிட்டால் இலங்கைத் தோட்டத் தொழிலாளருக்கென ஒரு தொழிற்சங்கம் தொழிலாளர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் இலங்கை-இந்தியக் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட தன் மூலம் அதன் ஆரம்ப விழாவிற்கும், அங்கு ராரர்ப்பணக் கூட்டத்திற்கும் இந்தியத்தேசிய காங்கிரசின் முக்கிய தலைவரான பண்டித ஜவகர்லால் நேரு வந்த தன் மூலம் வம்சாவழியினர் நேர்க்கை, இந்திய முதலாளித்துவப் பிரம்மாண்டத்தை அதன் வர்த்தக விஸ்தீரன மனப்பான்மையை ஊகிக்க முடிகிறது. அத்தோடு காங்கிரசின் முதல் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் முக்கியமானவர் திரு. சௌ. தொண்டமானும் திரு. ஏ. அசீசும் ஆவார்கள். அவர்களும் ஏனைய தலைவர்களும் எந்தவிதத்திலும் தோட்டத்தொழிலாளர் வர்க்கத்தைச்சார்ந்தவர்களல்லர். பதிலுக்குப் பணம்படைத்த தோட்ட முதலாளித்துவ. வாணிப வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு எந்தவிதத்திலும் தொழிலாளர்கள் பேரிலோ, ஈழத்தின் பேரிலோ எந்தப்பற்றதலும் இல்லை.

பதிலுக்குத் தங்கள் முதலீட்டிலும், இந்தியாவிலுள்ள தமது பாரம்பரியச் சொத்திலுமே எண்ணம் கொண்டிருந்தார்கள். இதற்கு மாறாகத்தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவின் தமிழ்ப் பகுதியிலிருந்து வந்தாலும் இலங்கையின் மலைப்பகுதிகளைத்தாயகமாகக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய நலனில் வம்சாவழியினரோ அல்லது, வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்த 'பூர்வீகக் குடிகள்'' என்று சொல்லிக்கொள்பவர்களோ அக்கறை காட்டவில்லை. வம்சாவாளியினரின் வாணிபப் போக்கும் அவர்கள் தம் இந்தியத் தேசியச் சிந்தனையும் தோட்டத்தொழிலாளர்களை இலங்கை அரசியல் போராட்டங்களில் பங்கு பற்ற விடாது ஒதுக்கி வைத்தது. இல்லாவிட்டால் 1949-ம் ஆண்டு அவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அத்தொழிலாளர்கள் திரண்டு ஆக்கபூர்வமானதொரு போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டும். அப்படி ஒன்றை அவர்களோ, வம்சாவளியினரோ அல்லது இடது சாரித்தலைவர்களோ நடத்தவில்லை. இதனால் இலங்கை இந்திய காங்கிரஸ் கட்சி கலைக்கப்பட்டபோது இந்திய வம்சாவளியினர் பிரிந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (C. W. C ) என்று இந்திய வம்சாவளியினரான தொண்டமான் தலைமையிலும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் (D. W. C.) என்று பாகிஸ்தானிய வம்சாவளியினரான ஏ. அசீக தலைமையிலும் அமைக்கப்பட்டன. இவர்கள் இருவரும் தோட்டத் தொழிலாளர்கள் அல்லர். நிலப்பிரவும், வர்த்தகரும் ஆவார்கள்.

இவர்கள் எந்தக் காலத்திலும் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டவில்லை. இல்லாவிட்டால் தமிழ்த் தொழிலாளர்களைப் பாதிக்கும் வண்ணம் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டபோது அத் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் நிலங்கள் பலவந்தமக்கப் பறிக்கப்

தொடர்ச்சி 9-ம் பக்க பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ் எதிர்காலம் எவர் கையில்-I

**அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், பன்னாட்டு முதலீட்டாளர்களினதும் கோரப்பிடியில் சிக்கி தமது பொருளாதார சமூக, அரசியல் அனைத்தும் சீரழிந்த நிலையிலுள்ள பிலிப்பைன்ஸ் நாட்டு வரலாற்றினையும் இன்றைய சமூக பொருளாதார நிலைமைகளையும் ஆராய்ந்து பார்ப்பது ஈழப் போராளிகளுக்கும், புரட்சிவாதிகளுக்கும் உறுதுணையாக இருக்கும்.**

தென் கிழக்காசிய நாடுகளில் ஒன்றான பிலிப்பைன்ஸ் வடக்கிலும் மேற்கிலும் தென் சீனக்கடலாலும் கிழக்கே பசுபிக்-சமுத்திரத்தினாலும் தெற்கே மின்டானோகடலாலும் சூழப்பட்டிருக்கும் ஒரு தீவுக் கூட்டமாகும். கிட்டத்தட்ட 7000 தீவுகளைக்கொண்ட இந்நாட்டில் 2000 தீவுகளே பெயரிடப்பட்டுள்ளன இத்தீவுகள் லூசேன், (LUZON), விசாயா, மின்டானோ, என்ற மூன்று பெரும் பிரிவுகளாகவும் 12 பிரதேசங்களாகவும், 63 மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

83 வீதமான மக்கள் ரோமன்கத்தோலிக்க சமயத்தை சேர்ந்தவர்களாகவும், 5 வீத மக்கள் முஸ்லிம் சமயத்தை சார்ந்தவர்களாகவும் ஏனையோர் கிறிஸ்தவ மதத்தின் மற்ற பிரிவை சேர்ந்தவர்களாகவும் உள்ளார்கள். 83 வேவ்வேறு மொழி பேசும் இனத்தினர் வாழும் இந்நாட்டில் பெரும்பான்மையினரின் ''டகாலொக்'' மொழியே தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1515 ஆம் ஆண்டிலிருந்து ஸ்பானியரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த இந்நாட்டு மக்கள் 1898-ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் தள்ளப்பட்டனர். ஸ்பானிய காலனித்துவத்திற்கு எதிராக அகினல்டோ என்பவரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட போராட்டத்தை ஸ்பானியர் முறியடித்ததினால் ஹொங்கொங்கிற்கு தப்பியோடிய அகினடோவுடன் அமெரிக்க அரசு தொடர்பு கொண்டு ஸ்பானிய அரசுக்கு எதிராக போரைத் தொடங்கினர். அமெரிக்காவின் எதிர்பாரத தாக்குதலினாலும் ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும், ஸ்பானியருக்கு எதிரான பல பிரச்சினைகளினாலும், பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பினாலும்மேற்கொண்டு பிலிப்பைன்சை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க முடியாது என்று கண்ட ஸ்பானியர் பிலிப்பைன்சை 200,000, அமெரிக்க டாலர்களுக்கு ஒப்பந்தம் மூலம் அமெரிக்காவிற்கு விற்றனர். அன்றிலிருந்து பிலிப்பைன்சை தனது நாட்டின் காலனியாக அமெரிக்கா பிரகடனப்படுத்தியது.




தமது ஆட்சிக்கு எதிராக மக்கள்கிளர்ச்சி செய்யக்கூடும் என்று எண்ணிய அமெரிக்கர் 1898-ம் ஆண்டு பேரளவில் சுதந்திரத்தை கொடுத்து தமது கைப் பொம்மையாகிய அகினல்டோவை பிரதமராக்கி தமது சுரண்டல்களையும் அடக்கு முறைகளையும் ஆரம்பித்தனர். மண் வளத்தினாலும் கனிப் பொருள் வளத்தினாலும் நிறையப் பெற்ற அழகிய நாடான பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் அமெரிக்க ஏகாதிபதத்தியத்தின் கீழ் சிறிது சிறிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது உரிமைகளை இழக்கத் தொடங்கினர். அமெரிக்க ஆட்சிக்கு எதிராக ஏற்படுத்தப் பட்ட தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஆயுத பலத்தினுல் அடக்கப்பட்டன.

சிறுபான்மை இனத்தினராகிய மோரோ முஸ்லீம் மக்களின் விடுதலை போராட்டங்கள் அமெரிக்க இராணுவத்தின் நேரடித் தலையீட்டால் சிதறடிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தினரின் ஆட்சியான மத ஆட்சிக்கு அடி பணிய வைக்கப்பட்டது. இரண்டாவது உலகப் போரின் ஜப்பானியரின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் அமெரிக்க படைகள் பின்வாங்கி பிலிப்பைன்சை விட்டு தப்பியோடின, 4 ஆண்டுகள் ஜப்பானியரின் கொடூரம் நிறைந்த ஆட்சியில் பிலிப்பைன்ஸ் மக்கள் சொல்லொணு. துயரம் அனுபவித்தனர் 1945-ம் ஆண்டு 2 ஆம் உலகப் போர் முடிவடைந்த நிலையில் ஜப்பான் மீது அணுகுண்டு தாக்குதல் நடத்தியதால் ஜப்பானியர் அமெரிக்கரிடம் சரணடைந்தனர், இதன் பின் அமெரிக்கா தனது படைகளை மீண்டும் பிலிப்பைன்சுக்கு அனுப்பி நாட்டை தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். ஜப்பானிய படைகளுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் மக்கள் உருவாக்கிய "உக்பலகாப்" (HUG BALAHAK) கொரிலாப் படையினர் தொடர்ந்தும் அமெரிக்க படைகளுக்கு எதிராக போர் நடத்த ஆரம்பித்ததால், 1957-ம் ஆண்டு மீண்டும் பெயரளவில் பிலிப்பைன்சுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. அதே வேளையில் ஆகாயப் படைத் தளமும், கடற் படைத் தளமும் தமது சொந்த அதிகாரத்தின் கீழ் இருக்கவேண்டும். என்று ஒப்பந்தத்தை அமெரிக்க அரசு செய்துகொண்டது.

1965ம் ஆண்டில் அமெரிக்கர் கைப்பொம்மையான "பேடினன் மாகோசை" தேர்தலில் வெற்றி பெற வைத்ததின் மூலம் தனது முழுமையான சுரண்டலையும் அடக்கு முறைகளையும் நடை முறைப்படுத்தத் தொடங்கினர். 1970-ம் ஆண்டு புதிய அரசமைப்புச் சட்டம் அமுல்படுத்தி, ஜனுதிபதி ஆட்சியை ஏற்படுத்தி சகல அதிகாரங்களையும் தனது கையில் எடுத்துக்கொண்ட மார்க்கோஸ் உலக வங்கி, சர்வதேச கடன் வங்கிகளின் அலோசனையின்படி திறந்த பொருளாதார கொள்கையை ஏற்படுத்தி டன் நாட்டுகூட்டுக் கம்பெனிகளின் முழுமையான சுரண்டலுக்கும் வழி வகுத்துக் கொடுத்தார். 1972 ம் ஆண்டு நடக்கவிருந்த தேர்தலில் மாகோஸ் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டதினுல் எதிர்க்கட்சியினரின் வெற்றி தவிர்க்க முடியாததொன்றென அறிந்த மாகோஸ் 1972-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21-ம் தேதி இராணுவ சட்டத்தை பிரகடனப்படுத்தினுர். கிட்டத்தட்ட 60,000 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் போடப்பட்டனர். ஜனுதிபதி உத்தரவு என்ற சட்டத்தின் மூலம் (P.C.O) தனக்கு எதிரான அரசியல் தலைவர்கள், தொழிற்சங்க தலைவர்கள், எழுத்தாளர்கள், மாணவர் தலைவர் அனைவரையும் சிறையில் அடைத்தார்' இராணுவ நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டு அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர் என்று பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அரச பயங்கர வாதம் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது. நூற்றுக்கும் மேலானவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணுமல் போயினர். சிறையில் அடை

---

தேசங்களின் வாழ்வில் முக்கியமான பிரச்சனைகள் பலத்தைக் கொண்டுதான் தீர்க்கப்படுகின்றன பிற்போக்கான வர்க்கங்களே வழக்கமாக முதன் முதலில் வன்முறையையும் உள்நாட்டுப் போரையும் கைக்கொள்கின்றன. அவைதாம் முதன் முதலில் "துப்பாக்கி கத்தியை நிகழ்ச்சி நிரலில் வைப்பவை" அப்படித்தான் ரஷ்ய ஏதேச் சாதிகார முறை ஜனவரி 9 லிருந்து முறைமையுடன் விடாப்பிடியாக அங்கும் செய்து விட்டது செய்து வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை தோன்றியிருப்பதினுல், அரசியல் நிகழ்ச்சி நிரலில் துப்பாக்கிக் கத்தி முக்கியமான அம்சமாக ஆகியிருப்பதால் புரட்சியெழுச்சி அவசர அவசியமாகி விட்டிருப்பதால், அரசியல் சட்டப்பிரனமகளும் நாடாளுமன்ற முறை பற்றிய பள்ளிப்பாடங்களை கற்பதுவும் வெறுமே முதலாளி வர்க்கம் புரட்சிக்குத் துரோகம் செய்வதை மறைக்கும் திரையாகின்றன, முதலாளி வர்க்கம் புரட்சியிலிருந்து "பின் வாங்கி வருகிற" உண்மையை மறைக்கும் திரையாகின்றன. அப்படி ஆகின்ற போது சர்வாதிகாரம் என்கிற கோஷத்தை தான் உண்மையாகவே புரட்சிகரமான வர்க்கம் முன்வைத்துத் தீர வேண்டும்.

இந்தச் சர்வாதிகாரத்தின் பணிகளைப் பற்றிய பிரச்சினை குறித்து மார்க்ஸ் "புதிய ரைன்" பத்திரிகையில் எழுதியதாவது காலாவாதியாகிவிட்ட அரசாங்கங்களின் பிற்போக்கான முயற்சிகளை எதிர்த்துத் தேசிய சபை சர்வாதிகார முறையியே செயலாற்றியிருக்க வேண்டும் அதன் வழியாகப் பொதுஜன அபிப்ராயத்தின் பலத்தை அது சம்பாதித்துக் கொண்டிருக்கும் அந்தப் பலத்தின் பின்னே எல்லாத் துப்பாக்கிக் கத்திகளும் கட்டைகளும் நொறுங்கிவிடும்.

—புரட்சிப் புரவலன் லெனின்
நூல் திரட்டு தொகுதி II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்கள் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். மனித உரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட நிலையில் அமெரிக்க மாகோஸ் கூட்டு அரசினால் கட்டவிழித்து விடப்பட்ட அரசு பயங்கர வாதம் மக்களை கிலி கொள்ளப் பண்ணியது.

எந்த விதமான உரிமைகளுக்கும் மக்கள் குரல் எழுப்ப முடியாத நிலையில் ஒடுக்கி வைக்கப்பட்டு முதலாளித்துவ பொருளாதார ஆக்கிரமிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. சுதந்திர வர்த்தக வலயங்கள் திறக்கப்பட்டன. பன்னாட்டு முதலீட்டாளர்கள் சர்வதேச வங்கிகளின் உதவியுடன் தமது தொழிற்சாலைகளை கட்டியெழுப்பினர். புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. தொழிற்சங்க உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டன பாரிய மின்சார உற்பத்தித் திட்டங்கள், அணைக்கட்டு வேலைகள் போன்றவற்றிற்கு உலக வங்கி பணத்தை வாரி இறைத்தது. பணப்புழக்கம் அதிகரித்தமையினால் விலைவாசி உயகவு மலைபோல் ஏறத் தொடங்கியது. இலாபத்தை ஒரே நோக்கமாகக் கொண்டிருக்கும் பன்நாட்டு பல் தேசியக் கம்பெனிகள் மிகக் குறைந்த ஊதியத்திலே தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியது. தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பு அல்லது அவர்களின் நலன்களோ எதுவும் கவனிக்கப்படாத நிலையில் தமது உரிமைகளுக்காக தொழிலாளர்கள் போராட முற்பட்டனர், இதற்கென தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தங்கள் யாவும் இராணுவத்தின் மூலம் வன்முறையால் முறியடிக்கப்பட்டது.

அமெரிக்க மாகோஸ் கூட்டு அரசின் மனித உரிமைகள் மீறல் பற்றி ஐ. நா. சபையில் எடுத்துரைக்கப்பட்டது. பல்வேறு மனித உரிமை இயக்கங்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நீதிபதிகள் சபை, என்பன தாம் நேரில் கண்டறிந்த முழுமையான மனித உரிமை மீறல்களை ஆதாரமாகக் கொண்டு மாகோஸ் அரசின் கொடும் போக்கிற்கு எதிராக கண்டன அறிக்கைகளை விட்டன. ஆனால் எந்தவிதமான சர்வதேச அப்பிராயங்களுக்கும் மாகோஸ் அரசு செவிசாய்க்கவில்லை. மாறாக மாகோஸை உலகின் இருபது சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவராக அமெரிக்கா பிரகடனப்படுத்தியது.

இன்று ஆயிரத்திற்கும் அதிகமான அரசியல் கைதிகள் சிறையில் இருக்கிறார்கள். 1972 ம் ஆண்டு 60 000 எண்ணிக்கையில் இருந்த இராணுவம் இன்று 2, 50 000 ஆக விஸ்தரிக்கப்பட்டுள்ளது

வருடா வருடம் இராணுவ தளங்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் ஆண்டொன்றுக்கு 500 மில்லியன் டாலர்களை மாகோஸ் அரசாங்கம் இராணுவ உதவியாக பெறுகின்றது. இப்படைத்தளங்களின் அருகே உள்ள நகரங்களில் விபசாரம், போதை வஸ்துக்கள் போன்ற சமூக விரோதச் செயல்களே தலை தூக்கியுள்ளன இந்த நகரங்கள் படைத்தள எல்லைக்குள் அமைந்திருப்பதனால் இக் குற்றச் செயல்களை தடுக்க அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியவில்லை. வியட்னாம் போரில் பிலிப்பைன்ஸ் இராணுவம் அமெரிக்காவிற்கு ஆதரவாக நேரடியாக ஈடுபட்டதையும், இரண்டு தளங்களும் உபயோகிக்கப்பட்டதையும் ஆராய்ந்து பார்த்தால் இராணுவத் தளங்களை பிலிப்பைன்சில் வைத்திருக்கும் அமெரிக்காவின் நோக்கத்தை தெளிவாக புரிந்து கொள்ளலாம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சுரண்டலுக்கும், ஆக்கிரமிப்பிற்கும் இராணுவ விஸ்தரிப்பு இன்றியமையாததாகின்றது.

அன்பும் ஆதரவும் நிறைந்த பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் அமெரிக்க-மாகோஸ் சர்வாதிகார அரசின் இராணுவ ஒடுக்கு முறையினாலும், பொருளாதார சீர்கேட்டினாலும், இயந்திரமயமான, வாழ்க்கை சூழலினாலும், பாதிக்கப்பட்டு சகல உறவுகளும் பணத்திற்காகவே என்ற நிலையில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். மக்களின் அடிப்படை பிரச்சனைகள் எதுவும் தீர்க்க முடியாத நிலையில் மாகோசின் அரசு இராணுவ பலத்தினால் நாட்டை ஆண்டு கொண்டு இருக்கின்றது. ஆனால் இராணுவ அடக்கு முறைகளாலும் சர்வாதிகாரத்தினாலும் எந்த நாட்டு மக்களும் முதலாளித்துவத்தின் ஏகபோக சுரண்டலுக்கு அடிபணிந்ததாக வரலாறு நாம் கண்டதில்லை. அந்த வழியில் இன்று பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களும், தேசிய ஜனநாயக முன்னணி என்ற அமைப்பின் கீழ் ஒன்றுபட்டு, அமெரிக்க மாகோஸ் அரசிற்கெதிராக போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஒன்றுபட்ட மக்களின் எதிர்ப்பினால் மாகோஸ் அரசு இன்று ஆட்டம் கண்டுள்ளது என்பதை அண்மைக்கால சம்பவங்களின் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது. சகல மக்கள் பிரிவினரையும் ஒன்று திரட்டி அமெரிக்க-மாகோஸ் சர்வாதிகார அரசினர்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தேசிய ஜனநாயக முன்னணியின் வரலாற்றையும், வளர்ச்சியையும் அடுத்த இதழில் ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம் பக்கத் தொடர்ச்சி

நிறை உச்ச விளைவுகளை உற்பத்தி செய்யக் கூடிய B-83, B-43 வகைக்குப்பதிலாக விமானத்தாக்கி கப்பல்களில் பொருத்தப் பட்டிருப்பதாகவும், W-81 வகை குறைந்த தாக்க உற்பத்தி உடைய முனைகளானது (Warheats) பயங்கர விமான எதிர்ப்பு எவுகணைகளில் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. 1984-இல் இந்து சமுத்திரத்தில் உலாவும் கப்பல்களிலும் நீர்முழ்கிகளிலும் 1500 KM பாயக் கூடிய கடலில் மிதக்கக்கூடிய கோரே ஏவுகணைகள் (W 8$_0$-200 கிலோ தொன் வகை) காவிச் செல்லப்படலாம். சிசிலியில் அமைக்கப்பட்டுள்ள ஏவுகணைகளின் தாக்க எல்லைக்குள் மத்திய கிழக்கு இருப்பதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.

அமெரிக்க விஞ்ஞானிகள் சபையின் ஆயுதக்கட்டுப் பாட்டு பிரிவு அங்கத்தவரான கிரிஸ்தோப்பர் பய்னே அமெரிக்க கப்பற் படையின் அதிகாரித்து வரும் அணு ஆயுத மயமாக்கும் அங்கம் பற்றி ஓர் அறிக்கையைத் தயாரித்துள்ளார். தரை கடல் ஆகாய படை வீரர்களினால் பாவிக்கப்பட பழைய F-10 பாத்தம் விமானங்கள் அணு ஆயுத வினியோகத்திற்கு உகந்ததல்ல அதற்குப்பதிலாக F-18 கோ மெறு பாவிக்கப்படுகிறது.

அணு ஆயுதம் காவும் வசதியற்ற செங்குத்தாக எழும்பக்கூடிய இறக்ககூடிய AV A-8 விமானங்களுக்குப் பதிலாக அணு ஆயுதம் தாங்கிச் செல்லக்கூடிய AVB-B வகை விமானங்கள் உபயோகத்தில் வந்துள்ளன. அணு ஆயுதத்தன்மையற்ற 105MM பீரங்கிகளுக்கு ஈடு செய்யும் முகமாக இரு மடங்கு திறமை வாய்ந்த 155M அணு சக்தி பீரங்கிகள் பாவனைக்கு வந்துள்ளன. இவற்றை நோக்குசையில் கடற்படையின் பலமானது இரும்டங்குக்கு மேல் வலுப் பெற்றுள்ளமை கண் கூடாக புலப்படுகிறது.

இந்த அறிக்கையானது 8 வகையான அணு சக்தி 155MM பீரங்கி துப்பாக்கி வகைகள் உள்ளதாகவும், இவையும், புதிய W-F9 நியூட்ரன் குண்டுகளும் சராசரியாக 3, 300 W-33 அணு சக்தி எறி மைல்கள் (Atomic Project Miles) தாக்கு திறன் உடையாவை எனவும் குறிப்பிடுகிறது. 800 W-79 நியூட்ரன் குண்டு வகைகள் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க அரசியல் தாக்கமுடைய கடற்படைப் பிரதேசங்களில் வைத்திருப்பதற்காக உருவாக்கப்பட்டன.

ஐக்கியநாடு சபையில் கூட்டுசேரா நாடுகள் சார்பில் இந்தியா இந்து சமுத்திரம் அமைதிப்பிரதேசமாப் முடிவினை பாதுகாக்க படவேண்டும். என பலமுறையும் வற்புறுத்தியும், அதற்காக மகாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் எனதும் கேட்டு வருகிறது. இரு முறை பிற்போடப்பட்ட இம்மகாநாடு 1985-ம் ஆண்டு பிற்பகுதியில் கொழும்பில் நடக்கலாம் என்று அட்ஹொக்குழு அனுமதி வழங்கியிருந்தாலும், 1984-ம் ஆண்டில் இம் மாநாட்டுக்கான திகதிகளைத் தீர்மானிக்க முடியாமல் அட்ஹொக்குழு தத்தளித்து தோல்வியைத் தழுவியமை இம் மகாநாடு 1985-ம் நடத்தப்படுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

மேற்கத்தைய சக்திகளின் நடவடிக்கைகள் இந்து சமுத்திர பிராந்தியத்தின் அரசியல் பாதுகாப்பு என்பனவற்றை சீர்குலைப்பாதாகவும், இவற்றைத் தடுப்பதற் காண முயற்சிகள் முன்வைக்கப்படும் போது அவை நசுக்கப்படுவதாகவும், ஹொக்குழு கூட வல்லரசுகளின் விளையாட்டுக்களமாக மாறி திண்டாட வேண்டிய நிலைக்குத் தள்ளி விட்டதாகவும் இந்தியாவின் ஐக்கிய நாடுகள் சபை 'உப நிரந்தர பிரதிநிதியான வினே வேமா, குறிப்பிட்டுள்ளார்.

ஹொக் குழுவின் அறிக்கையின் மேல் எடுக்கப்பட்ட முடிவில் தான் பங்களிக்க போவதில்லை. என அமெரிக்கா அறிவித்துள்ளது. இது அதன் ஒத்துழையாத்தன்மையை தெளிவாக்குகிறது.

அணு சக்தி ஏவுகணை நீர் முழ்கிகளினதும் நீண்ட தூரதாக்கு திறனுள்ள குண்டுவீச்சுக் கப்பல்களின் அறிமுகங்களும், டியாகோ காசியாவின் விஸ்தரிப்பு, நவீன மயமாக்கும் வேலைகளின் தொடரும் நிலையும் இந்து சமுத்திர பிராந்தியத்தை அமெரிக்கா மற்றொரு யுத்தக்களமாக மாற்றி வருவதோடு, இங்கு நிலவிவரும் இராணுவ நிலை நிரந்திரமானது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டபோதும், ஏன் தொழிலாளர்களேயும் மலேயகத் தமிழர்களேயும் ''இந்திய வம்சாவளியினர்'' என்ற தரப்பில் சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் கட்டாயக் கடத்தல் நடத்தும்போதும் ஒரு போராட்டம் நடத்தி அவர்களுக்கு விமோசனம் கண்டிருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலேயில் தான், இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் இருந்து வருகிருர்கள், இவர்களுடைய அன்ருட உழைப்புப்பற்றி, ஊதிய உயர்த்தி பற்றி வம்சாவளித் தலேவர்களும், ஏனேய சிங்கள இடதுசாரித் தலேவர்களும் கருணே ரீதியில் அக்கறை காட்டினரே தவிர, அவர்களின் அரசியல் உரிமைக்காகவோ, அல்லது உடமைப்பாட்டுப் போராட்டத்திற்காகவோ, அணி வகுக்கவில்லே.

அதேபோல்தான் 'பெட்டியாகலேத்' தோட்டத்தின் சொந்தக்காராகவிருந்த சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகம் பூர்சுவா ஜனநாயகவாதியாகப் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தபோது மலேயக மக்களுக்காக குரல் கொடுத்தார். அதைக் காரணமாக குறிக்கோளாக வைத்து தமிழரசுக் கட்சியும் ஆரம்பித்தார். இங்கு என்ன முக்கியம் என்ருல் ஒரு இனம் மற்றமொரு இனத்தை ஒடுக்கும்போது அடக்குமுறையை முதலில் எதிர்ப்பவர்கள் அடக்கி ஒடுக்கப்படுவோரிலுள்ள பூர்சுவாக்களும் ஜனநாயக வாதிகளுமே.

இந்த அடிப்படையிலேயே ஆரம்பித்த தமிழரசுக் கட்சி இன்று தமிழர் விடுதலேக் கூட்டணியாகப் பரிணமிப்பதற்கும் காரணகர்த்தாவாக விளங்கியவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களே.

1949-ல் ஆண்டு மலேயகத் தமிழர்களின் அதாவது பிரஜாவுரிமை, வாக்குரிமை பறிபோனபோதுதான், முதல் முறையாக இலங்கைப் பாராளுமன்றத்திற்கு முன் அடையாள சத்தியாக்கிரகம் செய்தவர்கள் மலேயகத் தமிழர்களும், அவர்கள் முன்ஞேடிகளும், அவர்கள் தலேவர்களுமாவர். இதில் குறிப்பிடத்தக்கவர்கள் காலஞ் சென்ற கே. இராஜலிங்கம், பெரியவர் பெரி. சுந்தரம் போன்ருேராவர். இந்தப் பலப் பரீட்சையின் போது, நம் பூர்வீகப் பெருங்குடி மக்கள் பங்கு கொள்ளவில்லே. பதிலுக்கு தலேவர் வன்னியசிங்கமும், தந்தை செல்வா அவர்களும் அனுதாப அக்கறை காட்டினூர்கள். அதனுலோ என்னவோ பின் தாமே தம் சார்ந்தோர் நலனிற்காக சத்தியாக்கிரகம் நடத்தினூர். அதைத் தொடர்ந்து, இன்று இதர தமிழ் மக்களும் அடிமைப்படுத்தப்படுகிருர்கள். ஒடுக்கப்படுகிருர்கள். ஒரவஞ்சிக்கப்படுகிருர்கள். திரும்பத் திரும்பத் தாக்கப்படுகிருர்கள் என்பதை ஒட்டுமொத்தமாக எல்லோரும் ஏகோபித்து ஒத்துக் கொள்கிருர்களே! இதைத் தீர்க்க தரிசனாக உணர்ந்து தமிழ் மக்களுக்கு சுய நிர்ணயம் கோரிஞரே! அதனுல்தான் என்னவோ சாதாரண சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளே செல்வநாயகம் ''ஈழத்து காந்தி'' என அழைக்கப்பட்டார். இன்று அவரைத் ''தந்தை'' என கௌரவிக்கிறது தமிழ் உள்ளங்கள்.

இங்கு மார்க்சிய லெனினிய மேற்கோளின் படி ஒரு தேசிய இனத்தின் சுய நிர்ணயத்தை நிர்ணயிக்க வேண்டியது அத்தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கமாஞலும், அத்தேசிய இனம் அடக்கி ஒடுக்கப்படும்போது, அத்தேசியத்தின் பூர்சுவார்கள் குரல் கொடுப்பது இயங்கியல் நியதியம் தர்க்கீகமுமே இதை புரவலன் லெனின் ஆழமாக வலியுறுத்துகிருன் ''தேசிய பிரச்சினேக்கான அனுபவரீதியான சாத்தியமான முடிவுக்கு தொழிலாளர்களேப் பொறுத்த மட்டில், இரண்டு போக்குகளின் ஒழுங்குத் தன்மைகளேப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, அடக்கி ஒடுக்கப்படும் தேசியத்தின் பூர்சுவார்கள் அடக்கி ஒடுக்கப்படும் தேசியத்திற்கு எதிராக போராடும் போது, இல்லே கிளர்ச்சி செய்யும்போது நாம் எப்போதும் ஏன் ஒவ்வொரு விடயத்திலும் இறுக்கமாக அவர்களே ஆமோதிக்கிருேம். ஏனெனில் நாம் அடக்கி ஒடுக்குவோரது பரமவிரோதிகள்.

(It is to the Bourgeoise that a ''practical'' solution of this question is important. To the workers the important thing is to distinguish the principles of fhe two trends.

In so far as the bourgeosie of the oppressed nation fights the oppressor we are always, in every case, and more strongly than anyone else, in favour, for we are the sfaunchest and most consistant enemies of oppression.

ஆனுல் ஒடுக்கப்படும் இனத்தின் பூர்சுவாக்கள் அல்லது இனவாதிகள் தமது சொந்த நலனுக்காக மட்டும் போராடினுல் நாம் அதற்கு எதிர்ப்பு; நாம் ஒடுக்கும் இனத்தின் சலுகைகளேயும் கெடுபிடிகளேயும் வலுவாகக் கண்டிருக்கிருேம் அதே வேளேயில் ஒடுக்கப்படுப் தேசியம் விளேயும் எந்த சலுகைகளேயுப் நாம் கண்டிக்க மாட்டோம்.

(In so far as the bourgeosie of the oppressed nations stands for its own rights we stand against. We fight against the previleges and violence of the oppressor nation and do not condone in any way strivings for previleges on the part of opprassed nation.

ஆகவே சுய நிர்ணயம் நாடுவோர், தனித்தேசியம் நாடுவோர் அத் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கத்தின் சுய நிர்ணயத்தையே மனதில் கொள்ள வேண்டும். இந்தப் பாட்டாளி வர்க்கம் என்னவென்பதையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். (இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு அலகுகள்

**(இந்த மண்ணும் எங்கள் நாட்களும்-ஓர் அறிமுகம்)**

**—பேராசிரியர் பெரியார்தாசன்—**

''கவிஞனின் பணி-கவிதை மட்டுமா? ஒரு போராட்டதைத் தலைமை ஏற்று நடத்தவும் வேண்டும்'' ஹோ-சி-மின் விடுகிற இந்த அறைகூவலைத் தற்காலத் தமிழ்க் கவிஞர்கள் தமிழகத்தில் பெருவாரியாக ஏற்கவில்லை. இன்னமும் எத்தனைத்தான் வடிவத்தில் புதிய முயற்சிகள் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டாலும் கருப்பொருளில் உள்ளடக்கத்தில் நமது கவிதைகள் பெரும்பாலும் பழைய பஞ்சாங்களாகவே இருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் எங்கள் மண்ணை நாங்கள் பெற்றாக வேண்டும்-இனித் தாமதிப்பதில் பொருளேயில்லை- என்று களத்தில் இறங்கிவிட்ட ஈழத் தமிழக்களின் நாடித் துடிப்புகள் கவிதைகளாகப் பிரசவிக்கப்படுகின்றன. அங்கே! அவற்றில் சிலவற்றின் தொகுப்புதான் 'இந்த மண்ணும் எங்கள் நாட்களும்' என்கிற வெளியீடு! இதில் நூறு நூறு புதிய பூக்கள்! நூறு நூறு புதியகருத்துக்

11-ம் பக்கம் பார்க்க

# சிறை உடைப்பு-சில கருத்துக்கள்

சென்ற இதழில் நாம்-சிறை உடைப்பு சிறப்பு நிகழ்ச்சி என வாழ்த்தி வரவேற்றிருந்தோம். இப்போதும் அதனையே உரத்துச் சொல்கிறோம்.

ஆனால் சிறை உடைப்பு தொடர்பாக தமிழகப் பத்திரிகைகளில் கொடுக்கப்பட்ட பேட்டிகளும், செய்திகளும், எம்மை கவலை கொள்ளச் செய்கின்றன.

''நாங்கள் தான் செய்தோம்'' என இரு இயக்கங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டதானது. கடல் கடந்த நாடுகளில் அதிருப்தியையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளதை எம்மால் சுட்டிக்காட்ட வேண்டியதாய் உள்ளது.

எமக்கு கிடைத்த தகவல்களின் படி இச் செயலில் பல இயக்கங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. தனிபட்ட முறையில் பலர் முக்கிய பங்காற்றியுள்ளனர்: மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இரு இயங்கள் இந்நடவடிக்கையை முன்னெடுப்பதிலும் செயலாக்கத்திலும், முக்கியபங்கேற்றுள்ளனர் அத்துடன் சிறையில் ஒரு இயக்கத்தை சார்ந்தவர்கள் மட்டும் இருக்கவில்லை. பல்வேறு இயக்கங்களை சார்ந்தவர்கள் உள்ளிருந்தனர். இச்செயலை முன்னெடுத்த இயக்கங்கள், நிச்சயம் தங்களை சார்ந்தவர்களை மட்டும் மீட்கும் பணியில் இருங்கியிருக்க மாட்டார்கள் என்றே நம்புகின்றோம். அப்படி இருக்கையில், செயலாற்றும் வரையில் பரந்த மனப்பான்மையுடன் செயலாற்றியவர்கள், முடிந்ததன் பின், உரிமை கொண்டாடுவதில் மட்டும் போட்டியிடுவது வேதனையை அளிக்கின்றது. இச்செயலை ஒரு இயக்க செயல் பாட்டுக்கள் மட்டும் குறுக்கிக் கொள்வதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இயக்கங்களிலிடவும் தனிப்பட்டோர் எந்த இயக்கமும சாராதோர், ஈழ விடுதலையில் ஆர்வம் கொண்டோர், சிலர் இந்நடவடிக்கையில் முழுமையாக பங்கேறறுள்ளனர். ஆதலால், இயக்கங்கள் மட்டத்தில் இந்நடவடிக்கையை குறுக்கி கொள்வது தனிப்பட்ட ஆர்வலர்களின் பங்கை மறுப்பதாய் அமையும் ஆதலால் இந்நடவடிக்கையை ''போராளிகள்'' மேற் கொண்டனர் என குறிப்பதே சரியானதாகும்.

அத்துடன் தமிழகப் பத்திரிக்கை பேட்டியளித்தோர் சிறையுடப்பு சாகசங்கள் பற்றி உற்சாகமாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். கூறியவைகளில் உண்மையில்லாமல் இருக்கலாம். இன்றைய சிறையுடைப்பு மட்டும்தான், இறுதியானதா? இச்சிறையுடைப்புடன் ஈழம் விடுதலை பெற்றுவிட்டதா? மட்டக்களப்பு சிறை உடைக்கப்பட்டிருக்கலாம், ஆனால் ஈழத்தை சுற்றியுள்ள சிறைக் கம்பிகள் அப்படியே உள்ளன. அது உடைக்கப்படல் வேண்டும். அது வரைக்கும் சிறை உடைப்புகள் தொடர வேண்டும்.

தமிழகப் பத்திரிக்கைகளுக்கு இச்சாகங்கள் தீனியாக அமையலாம், தமிழக மக்களுக்கு கிளர்ச்சியை, உற்சாகத்தை ஏற்படுத்தலாம் ஆனால், ஈழப் போராட்டத்திற்கு இது பாதகமாகவே அமையும். இதை கணக்கில் எடுக்காமல், கவலைப்படாமல் சாகசம் பற்றி உற்சாகப்படுவது சிலரை மட்டும் ஹீரோவாக்கி, நெஞ்சு நிமிர்த்த மட்டுமே உதவும். ஆதலால் இனிமேலும் இத்தவறுகளை மேற்கொள்ளாது செயலாற்ற வேண்டுமென சுட்டிக்காட்டுவது நமது கடமையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்! புதிய புதிய யுக்திகள்! புதிய புதிய வடிவங்கள்!''

இவற்றைப் படைத்தவர்கள் தமது படைப்புக்களிலிருந்தோ, அந்தப் படைப்புகளின் மூலவர்களான மக்களிடமிருந்தோ தங்களைச் சிறிதும் அந்நியப் படுத்திக் கொள்ளாதவர்கள்! மக்கள் நிலை அம்பலப் படுத்துதல்' வழிகாட்டுதல், புரட்சி ஆகியத் தளவரிசைகளில் இவர்கள் தங்கள் கவிதைகளில் ஆளுமைப் படுகிறார்கள்! வர்க்க சமரசத்திற்கோ சமரச சீர்திருத்த வாதத்திற்கோ ஆட்படாத இவர்கள் உழைக்கும் மக்களோடு இணைந்து அவர்களின் எழுச்சியைப் பிரதி நிதித்துவப் படுத்துபவர்களாக இருக்கிறார்கள்! சுருக்கமாகச் சொன்னால் இவர்கள் 'பஞ்சைப் பராரிகளின் பெரும்படை' வீரர்கள்! துப்பாக்கிச் சனியனால் துளைக்கப் பட்ட உடல்கள்- போராளிகளைச் கபளீகரம் செய்கிற சிறைக் கொட்டடிகள் – ஆளும் வர்க்கத்தின் வஞ்சகச் சூழ்ச்சிகள் — அவர்களின் ஆசை வலையில் அகப்பட்டுவிடும் சுயநல அரசியல் வாதிகள் — இவர்களையெல்லாம் மீறிக் கொண்டு எழுகிற மக்கள் சக்தி — இவைகளே இவர்கள் கவிதைகளின் உந்துசக்திகளாக இருக்கின்றன! இந்த மண் இவர்களுடையது — இவர்களின் நாட்கள் கொடுமையானவை! எனவே இவர்களின் கவிதைகள் நெருப்பு அலகுகளாகச் சுடர்விடுகின்றன!

தேசிய இனத்தைச் சூறையிடும் வர்க்கத்தைச் சின்னாபின்னப் படுத்தும் போராளிகளுக்கிடையே தோழமையையும், எதிரிகளுடன் நிர்த்தாட்சன்யமற்ற பகைமையையும் இக்கவிதைகள் விதைக்கின்றன! கொடுமைகள் காட்சிப்புலன்களாய் இவற்றில் முளைக்கின்றன! தேர்ந்த சொல்லாட்சிகள் கருத்துக்களுக்கு உரமூட்டுகின்றன!

''செத்தாலும் விடுதலைக்காய்

செத்த பெருமை பெறுவோம்'' என்று சாருமதி செய்கிற பிரகடனம், தியாகம் என்பது என்ன என்ற மாவோவின் வரையறையை வெளிப்படுத்துவதாக அமைகிறது! தன்னைத் தற்காத்தலும் எதிரியை அழிப்பதுமே தியாகம் என்றார் மாவோ! இதோ சாருமதி சொல்வதும் இதுதான்!

''துப்பாக்கிக் குழாய்கள்

எம் நெஞ்சை

துருத்தி நிங்கும்

சரித்திரங்களைத்

திருப்பிவிட நாம் துணிவோம்!

.................................

.................................

அப்பாவித்தன இறப்புகளை

அரசியலில் நாம் துறப்போம்!''

புரட்சிக்கருத்துக்களால் கனக்கிற இந்தக் கனல் கவிதைகளில், அழகிய உவமைகளும் நிராகரிக்கப் படவில்லை என்பது பாராட்டப் படவேண்டிய அம்சம்! க. ஆதவனின் 'வறட்சி' என்கிற கவிதையில வறண்ட நிலத்தை இப்படி வர்ணிக்கிறார் கவிஞர்!

''நரை விழுந்த பெண்முடிபோல்

செத்துப் போன அறுகம் புற்கள் —

பாளம் பாளமாய்

பல்லிழந்த தாத்தா வாய்போல்

ஓவெனப்

பிளவுபட்ட நிலம்!'' — இங்கே வறண்டு கிடப்பது நிலம் மட்டுமல்ல — மனிதருந்தான் என்பதை வெளிப்படுத்துவது நயமாக உள்ளது! உவமையும் கருத்தரித்திருப்பது இதன் சிறப்பு!

ஒடுக்கப்பட்ட இனத்தவர் ஓஹோ வென்றுதாம் வாழ்ந்த வரலாற்றைப்புரட்டிப் பார்ப்பது கனவுகளில் இன்பங்காண அல்ல! அதிலிருந்து உணர்ச்சி பெற! மீண்டும் தம் நிலைமைத் தாமே நிர்ணயித்துக் கொள்ள இந்த உணர்வை ஊட்டாத வரலாறு வெறும் பழங்குப்பையே!

''சேற்றில் வீழ்ந்தன

பொன்மணி முடிகள்!'' — ஆம் இன்றைய நிலை இதுதான்! சிங்களப் பேரின வாதச் சேற்றில் வீழ்ந்தன தமிழரின் பழைய பவித்திரப் பொன்மணி முடிகள்!

அதற்காக,

''கதவிடுக்குகளில் கிழிபட்ட

கற்புத் திரைகளை எண்ணிக்

கண்ணீர் வடிப்பதா?''

கூடாது! கூடாது!

''சாம்பல் மேட்டில்

மறைந்து விட்டன

பொன்மணி முடிகள் தான்!

அம்பும் வில்லும் கூடவா?''

ஹம்சத்வனியின் 'இறந்த காலங்களும் நிகழ்காலமும்' என்கிற இக்கவிதை என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது நேற்று என்ற வரலாற்றைச்சொல்வதோடு நிற்காமல், இன்றைக்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் அழுத்தமாய்ச் சொல்கிறது! தேடப்படவேண்டியது பொன்மணி முடிகளல்ல! அம்பும் வில்லும் தான் என்று அறை கூவுகிறது!

இந்த தொகுதியில் வெளிப்பட்டுள்ள கவிதைகளில் குறியீடுகள் மிக அற்புதமாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன! ஒரு வீட்டில் ஒரு தமிழ் இளைஞனைக் கைது செய்து கொண்டு சென்றுவிட்டனர் இராணுவக் காக்கிகள்! அவனுடைய தங்கையின் பார்வையில் முடிந்த இந்தச் செய்தி அமரத்வம் 22-04-81 இரவில் நடந்த பெறுகிறது.

''வேலியில் உலர்த்திய

வேட்டி காய்கிறது

வெயிலில் இன்னும்...''

வயல் வேலையில் ஈடுபட்டிருக்கிற தமிழ் முதியவர் ஒருவர் பறவைகளை விரட்டச்சீன வெடிகளைக் கொளுத்தில் போட்டார்!

''பறந்து போயிற்றுப் பறவைக் கூட்டம்

பிறகு வந்தது மிருகக் கூட்டம்''

இராணுவத்தினர் வந்ததை, இப்படிக் குறிக்கிறார் கவிஞர் அடிபடுகிற வர்க்கத்தின் பார்வையில் அடிக்கும் வர்க்கம் அஃறிணை தானே? —கவியரசனின் 'தொலைந்து போன நாட்கள்' என்னும் கவிதையில் இந்தக் குறியீடு வலுவாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது!

ஈழத்தில் இன்று களத்தில் நிற்கும் இக் கவிஞர்களின் கவிதைகள் புரட்சி உணர்வின் தர்க்கத்தில் சர்வதேசத் தரமுடையனவாய்த் திகழ்கின்றன. சீனக் கவிஞன் லூசுன், ஜெர்மானியப் புரட்சிக் கவிஞன் ப்ரெச்ட், இரஷ்ய மக்கள் கவிஞர் மயாகோவ்ஸ்கி, சிலியின் நெருப்புக் கவிஞன் பாப்லா நெருடா ஆகிய வர்களின் படைப்புக்கள் தாங்கிவரும் நம்பிக்கைகளை இவர்களின் கவிதைகளும் தாங்கியுள்ளன.

''மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்

மனிதனுக்கு கவுரவம்

வாழ்க்கைக்கான உத்தரவாதம்

யார் இதை எமக்கு மறுத்தல் கூடும்?

மறுப்பவர் யாரும் எம் எதிர் வருக!''

—அச்சத்தை உதறித் தள்ளுகிய மானுட எழுச்சியின் மகத்தான குரல் இது!

''காக்கி உடையில் துப்பாக்கி அரக்கர்

தாண்டவ மாடு'' வதைக் கண்டு இவர்கள் அஞ்சி நடுங்குவதில்லை!

''போராடுவதே மனிதனின் விதியெனில்

போராட்டத்தில்

மரணமடைவதும் மகத்துவம் உடையதே!'' என்பதை இந்தக் கவிஞர்கள் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள்!

'நாட்டுப் பிரிவினை கேட்கலாமா? சிங்களவரோடு இவர்கள் ஒத்துப் போனால் என்ன?' என்று இந்தியத் தலைவர் சிலர் ஈனக்குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள்! இவர்கள் பேச்சை இந்திய மக்கள் குறிப்பாகத் தமிழர்கள் ஏற்றுக் கொள்கிற ஆபத்து மங்கலாகத் தெரிகிறது! இந்தக் குரல் இலங்கை வாழ் தமிழர்கள் சிலராலும்—குறிப்பாக பணக்கார வர்க்கத்தால் எழுப்பப்படுகிறது. இவர்களின் மாயையைத் தெளிவிக்க இந்தத் தொகுதியில் உள்ள 'கானல்வரி' என்னும் கவிதை அருமையாக முயற்சிக்கிறது. இம்முயற்சியில் அது வெற்றி பெறுவதாகவும் கருதலாம்! கானல் வரிப் பாட்டே சிலப்பதிகாரத்தில் மாதவியும் கோவலனும் பிரிந்து போக வித்திடுகிறது! இந்தப் பின்புலத்தை கவிஞர் மு. புஷ்பராஜன் மிக அருமையான யுக்தியில் பயன்படுத்துகிறார்!

சிங்களவருக்கு இவர் தரும் அறிவிப்பு இது!

''கடந்து போன காலங்களில்

'மாவலி' யின் கரையெல்லாய்

கைகோர்த்து உன்னோடு

நடந்துவர நானிருந்தேன்.

இனி நாம் பிரிந்து செல்வோம்!'' ஏன் பிரிவு? என்ன அவசியம்! அவர்கள்தான் பவுத்தவர்களாயிற்றே! கொல்லாமையைப் போதித்த போதிமாதவனின் சீடர்களாயிற்றே அவர்கள்? ஏன் பிரிவு?

''போதி மாதவ மலர்கள் சூடி

முட்களை அங்கேன் மறைத்தாய்...!''

இப்போது புரிகிறது! ஆம்! அவர்கள் முட்களை மறைப்பது ஏன்?

''உன்னில் விளைந்த தவறிற்குக்
காரணத்தை ஏன்

என்னில் கண்டாய்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப்பேரினவாத அரசின் முதலாளித்துவப் போக்கால் சிங்களர் படும் துயருக்குத் தமிழர்கள் காரணம் காட்டப்படுகின்றனர். வதையின் கதை தொடர்கிறது. ஒவ்வொரு வதைக்குப் பின்னும் ஒற்றுமை கோரும் வசனங்கள் உச்சரிக்கப்படுகின்றன! இனி பொறுப்பதில் அர்த்தமேயில்லை!

''இருளினூடே

இணைந்து நாம் நடந்தபோது

சிந்திய வார்த்தைப் பசப்பில்

பட்ட துயரினிப் போதும்

இனி நாம் பிரிந்து செல்வோம்.''

இந்தப் பிரகடனம் உண்மை நிலையை மிகத் தெளிவாய் உணர்த்துகிறது. சிங்கள அரசோடு பொருதக் கற்பிக்கும் கவிதைகளோடு மட்டும் இத்தொகுப்பு நின்று விடவில்லை! சுயவிமர்சனத் தன்மையின் அவசியத்தை இக்கவிஞர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்! சாதி ஆணவம் கொண்ட தமிழரை நாகரீக நாட்டினை நாசமாக்கும் மனித விலங்குகளைச் சாடுவதில் இக் கவிஞர்கள் மிக ஆவேசமாகக் கவனம் செலுத்துகிறார்கள்.

கவிரசன் மானுட ஆன்மாவின் மகத்துவத்தின் முன்னே. சாதி ஆணவத்தால் தமிழர் ஆளுமை நிர்வாணமாய்த் தெருவில் திரிவதை மிகச் சரியாகப் படம் பிடித்துள்ளார் 'கோபுர கலசமும் பனைமர உச்சியும்' என்ற தனது கவிதையில் கைதடிக் கிராமத்தில் நடந்த சாதிச் சண்டையில், 'தெருக்கள் முழுவதும் மனித விழுமியம், நாகரிகம் காற்றில் பறந்ததை'ச் சுட்டிக் காட்டி சாடுகிறார்.

அப்போது,

''தமிழர்களது மான நரம்புகள்

மீண்டும் ஒருதரம் மின்னல் அதிர்ந்ததாம்! மனிதத்துவம் மரணித்த பின்னர் கோயிலாவது? கடவுளாவது? கோபுரமாவது?

''சிவபெருமானும், பாலமுருகனும் இன்னும் எஞ்சிய எல்லாக் கடவுளும் மன்மதன் உடலாய்த் தீயில் எரிக...'' என்று சீறுகிறார்!

இந்தக் கவிஞர்கள்,

''சிறுவர்களிடம் பொய்க்கதைகள்

சொல்லாதீர்கள்! தவறு

வானில் சொர்க்கத்தில்

கடவுள் இருக்கிறார் என்றும்

உலகெல்லாம் இன்பத்தில் மிதக்கிறது

என்றும் கூறுதீர்கள்''— என்று

ருசியக் கவிஞர் யெங்கனி யெவ்டுஷென்கோ கூறுவதைப் பாடமாக ஏற்றவர்கள். அதனால் தான் இவர்கள் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல்—அது தற்போது எப்படி இருக்கிறது' என்பதையும் யதார்த்தமாய்ப் பார்க்கிறார்கள்.

கவிதை இலக்கியத்தில் சில புதிய வடிவங்களைப் பரிசோதித்துப் பார்க்கும் கவிதைகளுக்கு இடையில், பட்டாளிகளின் பாரம் பரியக் களத்து மேட்டுப் பாடல் மெட்டுக்களையும் இந்தக் கவிஞர்கள் சுவீகரித்திருக்கிறார்கள். மக்கள் இலக்கியம் படைக்கப் போந்த இவர்கள் மக்களிடமிருந்து கற்று மக்களுக்கு வெளிப்படுத்துகிறார்கள் புசல்லாவ குறிஞ்சிளவன் பாடல் இவ்வகையானது.

அரசாங்கங்களின் வஞ்சகத்தால் நாடு இழந்த கடல்கடக்கும் மலையகத் தமிழரின் வேதனை இந்தப் பாடலில் ஓசை நயத்தோடு வழிகிறது.

''காடுவெட்டி மேடுவெட்டி
காலமெல்லாம் பாடுபட்டாடாம்
நாடுவிட்டு நாங்களின்று போறோம்—
அய்யா
நாதியற்று நாங்களின்று போறோம்!''

இவர்கள் படும் துயரமும், அவலமும் கேட்போர் நெஞ்சைப் பிழியும் ஒப்பாரி வடிவத்தில் கையறு நிலையாய் வெளிப்படுகிறது!

''மண்ணுக்கிரை யாக்கிவிட்டு
மைந்தர்பிதா மாதாக்களை
கண்ணிருடன் காலும்பின்னப் போறோம்
அய்யா
கப்பலேறிக் காணாத்தேசம் போறோம்''

இப்படி ''இந்த மண்ணும் எங்கள் நாட்களும்'' என்கிற இந்த ஈழத்துக் கவிதைத் தொகுப்பு இலக்கு அணிநயம், வரலாறு, குறையீடு, யதார்த்தம், வடிவமைப்பு, செய்திறன், யுத்திகள் ஆகிய எல்லா இலக்கிய நுட்பங்களிலும் செழுமைபட்டதாய், ஆழ்ந்த கவித்துவத்தோடு இலங்குகிறது! என்றாலும் தாம் தேர்ந்து கொண்ட கருப்பொருளுக்கு ஏற்ற வடிவத்தைத் தேர்ந்தெடுப்பதில் தற்காலத் தமிழ்க் கவிஞர்களுக்கு சற்றுப் பின்னடைந்தவர்களாகவே இக்கவிஞர்கள் இருக்கிறார்கள்! யுக்தி முறைகளிலும் தமிழகக் கவிஞர்கள் இந்த ஈழக்கவிஞர்களை விஞ்சுபவர்களாக உள்ளனர்!

இதற்கு எடுத்துக் காட்டாக இந்தத் தொகுப்பில் முதல் கவிதையாகப் பதிப்பிக்கப் பட்டுள்ள கவிதைச் சுவையுணர்ந்தேன்' என்ற கவிதையைக் கூறலாம்! வீச்சோடு சொல்லப்பட வேண்டிய பிரகடனத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

",பிணிவாய்ப் பட்டோர் தம் வருத்தம்
பெரிதும் தமது வருத்தமதாய்
உணர்வார் உள்ளம் உருகிடுவார்
உயர்ந்த மனிதப் பண்பினிலும்..."

என்று

பாராயணப் பாடல் வடிவில் தருவது சரியாக படவில்லை தமிழகக் கவிஞர் தோழர் வைர முத்து எப்போதும் தம்பாடல் கருவிற்கான வடிவத்தைத் தேர்வதில் அற்புதம் செய்வார்! கம்பனை விளிக்கும் போது,

"இராப்பகலாப் பாட்டெழுதி

இராசகவி ஆனவனே!

தமிழென்னும் கடலுக்குள்

தரைவரைக்கும் போனவனே!

... ... ...

சொல்லுக்குள் வாக்கியத்தை

சுருக்கி வச்ச கவிப்புலவா!"

என்று எழுதுவார்! இங்கே வடிவம் கருத்துக்கு மகத்துவம் அளிக்கிறது!

தமிழகக் கவிஞர்கள் தேர்ந்த தம் கவித் துவத்தை எந்த இலக்குக்குப் பயன்படுத்துவது என்பதைக் கற்க "இந்த மண்ணும் எங்கள் நாட்களும்" என்கிற கவிதைத் தொகுப்பை பாட நூலாக கூடக் கொள்ளலாம்!

---

புரட்சிகள் வரலாற்றின் உந்து சக்திகள் என்று கூறிஞர் மார்க்ஸ் புரட்சிகள் ஒடுக்கப் படும் மக்களின், சுரண்டப்படும் மக்களின் விழாகளாகும். புரட்சிக் காலத்தைப் போல வேறெந்த காலத்திலும் திரள் திரளாக மக்கள் ஒரு புதிய சமுதாய அமைப்பின் பாட்டாளிகளாக அத்தனை செயலாற்றலுடன் முன் வரக் கூடிய நிலையில் இல்லை. அப்படிப் பட்ட காலங்களில் மக்கள் அதிசயங்களை செய்து காட்ட முடியும். படிப்படியான முன்னேற்றம் எனும் குறுகிய சிறு முதலாளித் துவப் பாணியில் அமைந்த அளவுகோல் படி பார்க்கும் போது ஆனல் அப்படிப்பட்ட புரட்சிகரமான கட்சிகளின் தலைவர்களும் கூட தம்முடைய குறிக்கோளை மேலும் முழு விரிவாகவும், தைரியமாகவும் முன்னுக்கு கொண்டு வருவது அவசியம், அப்படிக் செய்தால்தான் அவர்களின் கோஷங்கள் எப்போதும் மக்களின் புரட்சிகரமான முன் முயற்சியின் முன்னே சென்றபடி இருக்கும் கலங்கரை விளக்கமாக பயன்படும். நம்முடைற ஜன நாயக சோசலீச இலட்சியத்தை ஒளிமயமான முழுமையான வடிவத்தில் மக்களுக்குக் காட்டும் முழுமையான சந்தேகமற்ற நிர்ணயமான வெற்றிக்கு மிகவும் குறுக்கலான மிகவும் நேரடியான பாதையைக் காட்டும். புரட்சிக்கும். நேரடிப் பாதைக்கும் பயந்து சமரசத்திற்கான சுற்று வழிப் பாதைகளைப் புனையும் வேலையை ஒஸ்வபஷ்தேனியே முதலாளி வர்க்கத்தின் சந்தர்ப்பவாதிகளுக்கு விட்டு விடுவோம். அப்படிப்பட்ட பாதைகளில் நாம் இழுத்துச் செல்லப்படப் பலவந்தமாக நிர்பந்திக்கப்பட்டால் அற்பமான அன்ருட வேலையிலுங் கூட நாம் நமது கடமையை ஆற்ற முடியும். ஆனல் முதலில் பாதையைத் தேர்ந்து கொள்வது ஈவிரக்க மற்ற போராட்டத்தில் தீர்மாணிக்கப்படட்டும். நேரடியான நிர்ணயமான பாதைக்காக ஓர் ஈவிரக்க மற்ற தியாகமான போராட்டத்தை நடத்துவதற்கு மக்களின் விழாக்கால ஊக்கத்தையும் புரட்சி ஆர்வத்தையும் பயன்படுத்தாவிட்டால் நாம் துரோகிகளாவோம். புரட்சியைக் காட்டிக் கொடுக்கிறவர்களாவோம். முதலாளித்துவ சந்தர்ப்பவாதிகள் எதிர்காலப் பிற்போக்கைப் பற்றிப் பேடித்தனமான பயத்துடன் எண்ணிப் பார்த்துக் கொண்டு இருக்கட்டும். பிற்போக்கு பயங்கரமாக நடந்து கொள்ளும் முதலாளி வர்க்கம் பின் வாங்கக்கூடும் என்கிற எண்ணத்தால் தொழிலாளர்கள் படமடையாது. பேரம் செய்து கொள்ளலாம் என்று தொழிலாளிகள் எதிர் பார்க்கவில்லை. அற்பமான சலுகைகளையும் கேட்கவில்லை பிற்போக்குச் சகதிகளை ஈவிரக்கமின்றி நசுக்கும் திசையில்-அதாவது பாட்டாளி வர்க்கத்தின் விவசாய மக்களின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் திசையில் அவர்கள் முயன்று வருகிருர்கள்.

—புரட்சிப் புரவலன் லெனின்
நூல் திரட்டு தொகுதி II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் துயரம் இது !

ஈழம் ஈழவர்க்கே- அதன்
செல்வம் உழைப்பவர்கே- சம
தர்மம் தழைக்கும் அங்கே

ஈழம் எமது தாயகம்
தமிழே எமது தாய்மொழி
பொதுமை மணம் கமழ்ந்திடும்
புரட்சிப் பூ மலரட்டும்

இலங்கைத் தீவை வளம்படுத்தும்
மலையகத்து தமிழர்காள்
இழப்பதற்கு எதுவுமின்றி
ஏழையாக வாழ்வதேன்
தேயிலைக் கொழுந் தொடித்து
நாட்டுக்குழைக்கும் மனிதர்காள்
வாழும் உரிமையற்று
அகதிகளாய் வாழ்வதேன்

(ஈழம் எமது...)

அகதிகளாய் ஆக்கப்பட்டோம்
ஆடுமாடாய் ஏற்றப்பட்டோம்
''சூரியன்கள்'' சுட்டதன்றி
செய்த ''நன்றி'' ஏதுமில்லை-

உணவு இல்லை உடைகள் இல்லை
கல்வி கற்க வசதி இல்லை
உழைத்து தேய்ந்தும் உயிர் கொடுத்தும்
பிறந்த மண்ணில் உரிமை இல்லை
இல்லை என்ற நிலை இனி
இல்லை என்று ஆக்கிடவே
சந்தியுங்கள் ஈழமதை
சிந்தியுங்கள் தத்துவத்தை

(ஈழம் எமது...

ஓடி ஆடி உருக்குலைந்து
உயிர் பிரியும் நேரம் இன்று
உண்மைக்காக நன்மைக்காக
உலகம் போற்றும் கொள்கைக்காக
வாழ்ந்தவர்கள் வாழ்பவர்கள்
வாழப் போகும் எமது மக்கள்
அனைவரையும் எண்ணிப்பார்த்து
பாடுவோம் போராடுவோம்

(ஈழம் எமது...)

—அகதி மகன்—

## நமக்கு வந்த மடல்

ஈழம் இரண்டாவது இதழில் (15-10-1983) வெளி வந்துள்ள ஈழம் எங்கள் தாயகம் என்னும் கட்டுரை தமிழர்களின் தொல் வரலாற்றைப் பற்றி நல்ல குறிப்புக் காட்டுகின்றது. உள்ளபடியே ஈழத்திலான ஆனைகோட்டைப்பெருங்கற் பண்பாடு அகழ்வுகளும், இலங்கையின் இரத்தினபுரி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உலகத்திலேயே தொன்மையான பழங்கற்கால பண்பாட்டு அகழ்வுகளும், மாலைத் தீவில் அண்மையில் ஃஎய்டெர்தால் என்னும் உலகப் புகழ் நார்வேசிய அகழ்வாராய்ச்சியர் கண்டுபிடித்துள்ள சிந்துவெளி பண்பாட்டுக்கு ஈடான தொன்மையான அகழ்வுகளும். இலெமுரியா கண்டக் கோட்பாட்டை உறுதிப்படுத்துகின்ற சான்றுகளாக மட்டுமே நின்றுடவில்லை. ஈழத்தையே தாய்நிலமாகவும் தமிழகத்தைச் சேய்நிலமாகவும் செய்ய வல்ல கருவை அவை கொண்டுள்ளதைப் புலப்படுத்துகின்றன. தமிழர்களின் வரலாற்றைப் புத்தமைக்கும் முயற்சியில் நாட்டம் கொண்டவர்கட்கு அவை யாவும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. ஈழப் புரட்சி வெற்றிப் பெற்று ஒரு மக்கள் ஈழம் மலர்வதென்பது வரலாற்று ஆய்வுகளுக்கு பெரிய ஊக்கத்தைத் தந்து அதனை தலைகீழாக புரட்ட வல்ல கண்டுபிடிப்புகளுக்கு இட்டுச்செல்லுமென்னும் நம்பிக்கை அதனால் மின்னலாய் இழையோடுகின்றது.

—குண—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...

ஈழத்திலும், சிறிலங்காவிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக கடந்த ஜுலை 83 இல் நடந்த பயங்கரங்களின் வடுக்களை அழியாத நிலையில், உலக அரங்கில் இனக்கலவரத்தின் தாக்கம் மடியத் தொடங்கி விட்டதாக கற்பனை பண்ணத் தொடங்கி விட்டனர். ஆனால் கலவரத்தின் பின்னணியை மறைத்து உலகின் கண்களில் மண்ணைத் தூவலாம் என்ற எண்ணத்தில் இறுமாந்திருக்கிறது சிறிலங்கா அரசு. ஆனால் ஈழவரின் சிறிலங்கா இனவாத அரசு மேலான எண்ணப் பாடுகள் என்றுமே மாறப் போவதில்லை, ஈழவர் என்றுமே தமது ஈழம் பற்றிய உயிரோட்டமான கண்ணோக்கை மேன் மேலும் வளம் பெறச் செய்வார்கள். இது ஒவ்வொரு ஈழவனினதும் கட்மை. நாம் எல்லோரும் எமது பிரச்னைகள் ஆழ ஆய்ந்து வினு வெழுப்பி வெளிக்கொணர வேண்டியவர்கள். சிடலங்கா அரசின் போக்கைப் பார்க்கும் போது அது அடிக்கடி தயக்கமில்லாமல் எத்தனை பொய்களையும் தயக்கமில்லாது சொல்வதும் அதுவே இறுதியில் உண்மை எனப் பல முறை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைகளும் உண்டு. சியோனிய அரசானது பல முறை ஈழவரின் பிரச்சனை பற்றி அறிய வந்த ஆய்வாளர்களையும், பத்திரிகையாளர்களையும் திறமையாக கட்டுப்படுத்தியது நிபந்தனைகளையும் விதித்தது. இவ்வாறன நடவடிக்கையால் உலகை ஈழவர் பிரச்சனையில் தவறன திசைக்குத் திருப்பிவிடலாம், மூளைச்சலவை செய்து விடலாம் என்றும் முயற்சிக்கிறது. இவை உலக அரங்கின் கண்டனத்தில் இருந்து தன்னைத் தப்புவித்துக் கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கையாகும்.

மேலும் இனக்கலவரத்தால் ஏற்பட்ட பொருளாதார சிதைவை அரசைக் கவிழ்க்க முயற்சித்த எதிர்ப்புச் சக்திகளால் உருவாக்கப்பட்டதாக கூறி வெளிநாட்டு உதவிகளைப் பெறலாம் என்பதை திட்டமாக நம்பியுள்ளது. அத்தோடு ஈழவரான எமக்கு நடந்தவற்றை துரதிருஷ்ட நிகழ்ச்சி எனக் கூறி இலாபம் தேடி கொள்ள முயற்சிக்கிறது. இதன் மூலம் சிங்கள முதலாளித்துவ அரசு இழப்பது தவிர்க்க முடியாத, விளம்பரம் ஒன்றையே ஏனெனில் இந்த அரசை ஆலிங்கனம் செய்து கொள்ள எத்தனையோ வெளி நாட்டு சக்திகள் தயாராகவுள்ளன. ஜெயவர்த்தனவின் அரசு ஈழவரின் போராட்டத்தைக் காரணமாக காட்டியே நாட்டை விற்கும் பணியில் ஈடுபட்டிருப்பதை இது முக்கியமாக விளக்குகிறது எனவே ஈழவர் போராட்டம் பற்றிய தெளிவு பரவலாக்கப்பட வேண்டும்.

சிங்கள இனவாத அரசின் தற்காலிக இக்கட்டான நிலையை மட்டும் கண்டு துள்ளிக் குதித்துக்கொண்டு கிடைப்பதைச் சுருட்டப் பார்க்கும் சந்தர்ப்பவாதி தமிழ் அரசியல்வாதிகளின் பலவீனமான முடிவுகளை ஈழவராகிய நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இனவதையையே குறிக்காகளாகக் கொண்ட அரசால் ஈழவர் துயர் துடைக்கபட முடியாது. ஒட்டுமொத்தமான ஈழவரின் விமோசனம் ஈழவரின் போராட்டத்தில் அவதரிக்கப் போகிறது என்பதை அறிந்த ஸ்ரீலங்கா அரசின் கருச்சிதைக்கும் முயற்சியே மாநில சுயாட்சி அமைப்பு நடவடிக்கை, அதை நம்மவரைக் கொண்டே செய்ய முயற்சிகள் நடந்தேறியுள்ளன. காலம் காலமாக சகிக்க முடியாத, பொறுக்க முடியாத அனுபவங்களை பெற்றுள்ள ஈழம் மக்கள் ஈழம் ஒன்றைத்தவிர வேறு எதையுமே அனுமதிக்கப் போவதில்லை. தற்காலிகமான தீர்வுகளினால் தமக்குப் பொருளாதார, கலாச்சார விடுதலை கிடைக்கப்போவதில்லை. என்பதை அவர்கள் எப்பொழுதோ உணர்ந்து கொள்ள தொடங்கிவிட்டார்கள். அவர்கள் தமது முடிவில் இருந்து சிறிதும் மாற்றிக் கொள்ள தயாராக இல்லை. ஈழவர்களை அழிக்கவே அரச சக்திகளை பயன்படுத்துகின்ற அரசை அவர்கள் எந்த வடிவத்திலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஈழவரின் நாடு சோஷலிச ஈழம் அந்த சுதந்திரக் காற்றை அவர்கள் சுவாசிக்கப் போகும் நாள் தொலைவிலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2ம் பக்க அட்டை தொடர்ச்சி)

ஜெருசலமே வாழ்கநீ! பாலஸ்தீனம் வாழ்கவே!
பணியனைத்தும் முடிந்தபின்தான் அமைதிகாணுவோம்!
படைக்கருவியை அப்போதுதான் கீழேபோடுவோம்!
ஜெருசலேமே வாழ்க நீ! பாலஸ்தீனம் வாழ்கவே!

எங்கள் தாயகம் என்றும் அச்சமற்றது!
இன்றோ நாளையோ அதுவிடியப் போகுது!
விடிவுக்காகவே நாங்கள் போர்புரிகிறோம்!
வீரர் நாங்களே! பாலஸ்தீன் எங்கள் தேசமே!

நாமனைவரும் நாடு திரும்பும் நாள் நெருங்குது!
நம் நெஞ்சு முழுதும் நம்பிக்கைச் சுடர் தெரியுது
மீண்டும் ஓர்நாள் அச்சமின்றி வாழத்தொடங்குவோம்
எமது மண்ணில் எமது மக்கள் அன்புகொள்ளுவோம்

ஜெருசலேமே வாழ்கநீ! பாலஸ்தீனம் வாழ்கவே!
பணியனைத்தும் முடிந்தபின்தான் அமைதி காணுவோம்!
படைக்கருவியை அப்போதுதான் கீழேபோடுவோம்!
ஜெருசலேமே வாழ்கநீ! பாலஸ்தீனம் வாழ்கவே!

டீன் ரீட்

21. நவ. 1977-லீப்சிக்

மொழியாக்கம்

பெரியார்தாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்ஸியம் பொய்ப்பதில்லை

கனவான்களே, ''புரட்சியின் வீச்சை'' நிர்ணயிக்கிற உண்மையான சமுதாயச் சக்திகளைப் பற்றி என்றைக்காயினும் நீங்கள் சிந்தித்ததுண்டா? தற்சமயம் நமக்கு வெகு சாதகமாக வளர்ந்துள்ள வெளிநாட்டு அரசியல் சக்திகளை, சர்வதேசக் கூட்டுகளை விட்டுவிடுவோம்; ரஷ்யாவின் உள்நாட்டுச் சக்திகள் பற்றிய பிரச்சினையை நாம் பார்த்து வருவதானுல் அவற்றை நாம் அனைவருமே விவாதத்திலிருந்து விலக்கி வைக்கிறோம் அப்படிச் செய்வது சரியுங்கூட இந்த உள்நாட்டுச் சமுதாயச் சக்திகளை பரிசீலியுங்கள். புரட்சிக்கு எதிராக எதேச்சாதிகார முறை, ஜார் மன்னன் பரிவாரம், போலீஸ், அதிகார வர்க்கம், இராணுவம், பிரபுவம்சத்தை சேர்ந்த சிறு கூட்டத்தினர் அணி வகுத்து நிற்கின்றனர். மக்களின் வெஞ்சினம் ஆழமாக வளர வளர துருப்புகள் மென்மேலும்! நம்பிக்கைவைக்கத் தகாதவையாகிவிடுகின்றன மென்மேலும் அதிகார வர்க்கம் ஊசலாடுகிறது. மேலும் மொத்தத்தில் முதலாளி வர்க்கம் இப்போது புரட்சியை ஆதரிக்கிறது, சுதந்திரத்தைப் பற்றி வாய்ப் பறை அடிக்கிறது, மென்மேலும் அடிக்கடி மக்கள் பெயரால், புரட்சியின் பெயராலுங்கூட பொழிந்து தள்ளுகிறது. எனினும் மாக்ஸியவாதிகளான நாமனை வரும் தத்துவத்திலிருந்து நாள்தோறும் மணி தோறும் நம்முடைய மிதவாதிகளை ஜெம்ஸ்துவோ உறுப்பினர்களையும் ஒஸ்வபஸ் தேனிய ஆதரவாளர்களையும் உற் கவனிக்கிறதிலிருந்து புரட்சியை ஆதரிப்பதில் முதலாளிவர்க்கம் முரணுள்ள தாய், தன்னலம் பேணுவதாய் பேடித்தனமுள்ளதாய் இருப்பதை அறிவோம். மொத்தத்தில் முதலாளிவர்க்கம் தவிர்க்கமுடியாதவாறு எதிர்புரட்சியை நோக்கித்திரும்பும், எதேச்சாதிகார முறையை நோக்கித் திரும்பும் அதன் குறுகிய சுய நலங்கள் கை கூடியவுடன் முரணற்ற ஜனநாயகத்திடமிருந்து அது ''பின்வாக்கிய''வுடன் (அது ஏற்கனவே பின்வாங்கி வருகிறது!) பாக்கி இருப்பது ''மக்கள்''—அதாவது பாட்டாளிவர்க்கமும் விவசாயி மக்களும் பாட்டாளிவர்க்கம் ஒன்றுதான் நம்பிக்கையுடன் முடிவுவரை சொல்லத் திறமை வாய்ந்தது ஏனெனில் அது ஜனநாயகப் புரட்சிக்கும் அப்பால் வெகு தொலைவுக்குச் செல்கிறது

—புரட்சிப் புரவலன் லெனின்

நூல்திரட்டு, தொகுதி-II